உ
சிவமயம்

"துறவி"

மன்மத
மலர் 1

திங்கள் வெளியீடு:

ஆடி
இதழ் 7

துறவி

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,
திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்:
சுவாமி சொரூபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

ஓம்.

" துறவி "

பொருளடக்கம்.

ஓம்:

"துறவி"

மன்மத மலர் 1	தமிழ் திங்கள் வெளியீடு.	ஆடி இதழ் 7

கடவுள் வாழ்த்து.

குறைவி லாநிறை வேகுணக் குன்றே கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேனுனை யன்றிமற் றடியே னொருபி ழைபொறுத் தாலிழி வுண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச் செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை யஞ்சலென் றருளா யாரெ னக்குற வமரர்களேறே.—சுந்தரர்

காகமுறவு கலந்துண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமா
யேகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிடநா மினியெடுத்த
தேகம்விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் சகத்தீரே. —தாயுமானுர்.

துறவியரும்—தொண்டும்.

அன்று தொட்டு இன்றளவும் நம் தமிழகத்தே தோன்றிய தாயுமானுர், பட்டினத்தடிகளார், சமயகுரவர்கள் முதலிய பெரியார் பலரும், தாம்கண்ட அநுபவப்பொருளை உலகம் உய்ய அரிய பணிகளாலும், பாக்களாலும், காட்டியும் அருளியும் இருக்கின்றுர்கள். முற்றத்துறந்த முனிவரர்களான அப்பெரியார்கள் தன்னலங்கருதாது நாடு, மொழி, சமயம் இவைகளைப் புறக்கணிக்காது ஆற்றிய பணியை என்னென்றுரைப்பது? அன்று நம் நாடு பல வளங்களாலும் செழிப்புற்றிருந்த தென்றுல் அதன் பெருமை அம்முனிவரர்களுடைய அரிய பணியேயாகும். எனவே, துறவிகளாகிய நாம் நம் நாடு, மொழி, சமயம் இவைகளைத் துறத்தல் செய்யாது நம்மால் இயன்றளவேனும் பல திறத்தாலும் பணிபுரிய முன்வருவோமாக. —பதிப்பாளர்.

நீதித் துண்டுகள்.

தவத்திரு. குக. சதாசிவ அடிகளாரவர்கள்
(சங்கேந்தி)

முன் (ம 1 இ 6 ப 67) தொடர்ச்சி

40 புண்ணைத் தக்க கருவியைக்கொண்டு கீறி உள்ளேயிருக்கின்ற அசுத்தங்களை யெல்லாம் வெளிப்படுத்திப் பிறகு ஆற்ற வேண்டியது. அவ்வாறு இரணசிகிச்சை செய்யாமல் அப்புண்ணை மூடி மறைத்து வைத்தால் அது உள்ளே புடைகொண்டு பெருந் தீங்கு விளைவிக்கும். அதுபோல உள்ளே பகைமை யுடையராய் தமக்கு அனுகூலமான சந்தர்ப்பம் வாய்க்குமளவும் வெளிக்குச் சிநேகம் பாராட்டித் திரிபவரிடம் சிறிதும் தாட்சணியங் கொள்ளாமல் அறிவுடையார் வெளிப்படுத்தி வேறுகாவிட்டால் அந் நல்லோர்க்கு அத்தீயோராற் பெருந்தீங்கு விளையும்.

41 இல்லிழந்தவர்கட்கும், கண்ணிழந்தவர்கட்கும், ஏழையாய்க் கஷ்டப்படுபவர்கட்கும், கொள்ளைமுதலிய காரணங்களால் பொருளை யிழந்து நிற்பவர்கட்கும் தாம் வருந்தி முயன்றாயினும் உணவு கொடுத்தவர்கள் சிறந்த அரசர்களாகி மனைவி மக்களோடு கூடி மேலாக வாழ்வார்கள்.

42 தீச்சுடரை வளர்க்க விரும்பியவன் நீரைக் கருவியாகக் கொண்டு வளர்க்கப் புகுந்தால் அது வளராமையேயன்றி யிருந்த தீச்சுடரும் அவிந்திடுமாறுபோல, தற்புகழ்ச்சியைக் கருவியாகக் கொண்டு தன்னைப் பெருமைப்படுத்தத் தொடங்கிய பேதையும்தான் பெருமைப்படாமையேயன்றி முன்பு தனக்குள்ள பெருமையையு-மிழத்தல்செய்வான். ஆதலால் தற்புகழ்ச்சி செய்பவன் கெடுப்பவரின்றித் தானே கெடுவன். தன்னைத்தான் மதியாமையே மதிப்பு.

43 செல்வம்படைத்ததற்குப் பயன் பிறர்க்குத்தான தருமம் செய்து தாமும் அனுபவித்தலேயாதலால், அவற்றைச் செய்யா-தார்க்குச் செல்வம் சம்பாதித்துக் காத்துவைக்குங்கடுந்துன்பங்கள் மாத்திரமே நிற்கின்றன; புண்ணியமும் புகழும் உண்டாகா; ஆதலால் அவர் செல்வத்தினும் செல்வமில்லாமையே மேல்.

44 பெரிய தொழிலைச் செய்யத்தொடங்கி ஒருகால் அதனை முடிக்காவிட்டாலும் பெருமையுண்டு. சிறிய தொழிலைச் செய்யத்

தொடங்கி முடித்துவிட்டாலும் பெருமையில்லை ஆகவே பெரிய தொழிலைச்செய்யக்கருதுதலே மேலோரியல்பு. ஆகவே அப்பெருந் தொழிலை அருமை காரணமாகப் பழித்துவிட்டிடார்.

45 தமது ஜீரண சக்தியின் அளவுக்கு மேற்படவுண்டவர் அஜீர்ணத்தால் பெருநோய்களுக்குள்ளாகி மனம்-மொழி-மெய்கள் தம் வசப்படாதபடி வருந்துவர். வயிற்றில் அரைப்பங்கை அன்னத்திலும் காற்பங்கை ஜலத்தினலும், காற்பங்கை வாயுசஞ்சரிப்பதற்கும் விட வேண்டியது அதிகமாகப் புசித்தால் நோயையும் ஆயுட்குறைவையும் சுவர்க்காதிபோகக் குறைவையும், புண்ணியக் குறைவையும், உலக நிந்தையையும் உண்டு பண்ணும், ஆகையால் அதை நீக்கவேண்டிய-தென்பது நூல்களின் நேர்ந்தகொள்கை.

46 கற்றுணர்ந்தவரைப் பொறுமை முதலியவற்றுல் அறியாதவ ரென்று இகழாமற் புகழ்வதும், உற்ற உறவினரை அனுகூலரல்லாதவ ரென்று நினையாமற் றழுவுதலும், இல்லற வாழ்க்கையை நீத்த சந்நியாசிகட்கு உணவும், உறையுமிடமும், உடையும் கொடுத்து அவர்களை ஆதரித்தலும் ஆகிய இந்த நல்லியற்கைகள் கல்வித்தேர்ச்சியின் பயன். ஆதலால் இவற்றை யுடையவரே பண்டிதரென்று கொண்டாடப் படுவர். அன்றி, வெறுங்கல்வி கற்றமாத்திரத்தால் அதற்கேற்ற இவ் வொழுக்க மில்லாதவர்கள் பண்டிதரென்று புகழப்படார்.

47 ஒருவன் நம்மைத் தூஷித்தால் பதிலுக்கு அவனைத் தூஷித்து அவனைப்போலாகாமற் பொறுத்து அதனுல் அவனிலும் மேம்படுதல் பெருமை; அதனோடு இங்ஙனம நிஷ்காரணமாக ஒருவனல் நாம் தூஷிக்கப்பட்டது முற்பிறப்பில் நாம் செய்த தீவினையின் பயனேயாதலால் அது இங்ஙனம் கழிந்தமை நலமேயென்று அதன் தத்துவத்தை யூன்றி உணர்ந்து அதில் மனதைச் செலுத்துமிடத்து, கருமந் தொலைந்ததற்காக மகிழக்கூடியதேயன்றி, நம்மை வீணே வைதானென்று அவன்மேல் மனவருத்தங்கொள்ள விடமில்லை.

49 ஒரு காரியநிமித்தம் தம்மிடம் வருபவர் தூரத்திலே திரும்பிப்போய் விடாதபடி தாம்பார்க்குங் குளிர்ந்த பார்வையையே அரும்பாகவும், அவர் நெருங்கும்படி தாம் காட்டுகின்ற முகமலர் ச்சியையே மலராகவும், அவர் நெருங்கிய பின்பு, உமக்கு என்னு லாகவேண்டுவது யாது என்று தாம் வினவுகின்ற இன்சொற்களின் வாய்ப்பை இனிய காயாகவும், பிறர்க்குத் தாம் கொடுக்குங் கொடையைப் பழமாகவும், கொடுப்பவரைக் கற்பகத்தருவாகவும் உருவகப்படுத்தி ஆன்றோர் கூறியுள்ளமையான் இத்தன்மையுடையவர் பூமியிலே கற்பகத்தருவை யொப்பாவர். (முற்றிற்று.)

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்சவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு திருநீ. சண்முகானந்த சுவாமிகள்
(ஸ்ரீ பிரமானந்த சுவாமிகள் மடம், மதுரை.

முன் (ம 1 இ 6 ப 71) தொடர்ச்சி.

ஈண்டு உள் பொருளென்னுந் துணையாய் நின்ற "திதி" என்பதைத் திதிப்படுமுலகத்திற் குபசாரமாகவும், "அந்தம்" என்பதை அந்தத்தைச் செய்யுமிறைவனுக் குபசாரமாகவுங்கூறினர். காணப்பட்டவுலகத்தாற் காணப்படாத இறைவனுக் குண்மை கூற வேண்டுதலின் "தோற்றியதிதியே யொடுங்கி மலத்துளதாம்" என வுலகின்மேல் வைத்துக்கூறினர். அங்ஙன் கூறினரேனும் உலகந்தானே தோன்றாமல் இறைவனாற் றோற்றுவிக்கப் பட்டதெனவும், சிலபூதவாதிகள் கூறுவது போல் முயற்கொம்பு போன்ற இல்பொருளன்று, உன் பொருளேயாமெனவும், மலபரிபாக முண்டாதற்பொருட்டு இறைவனிடமொடுங்கி மீளவுந் தோற்றுவதெனவுங் கருத்தாகக்கொள்க. ஏகாரம் தேற்றம். ஒடுங்கியென்பது வினையாலணையும் பெயர். ஒடுங்கியென்றவிடத்து இன்னுருபும், மலத்து என்றவிடத்து ஆனுருபுந்தொக்கு நின்றன

என்மனர் என்பது செய்யுள் முடிபாயதோர் ஆரீற்று முற்றுச்சொல். இசனுள் மன்னென்பது எதிர்கால விடை நிலை இதனைத் தொல்காப்பியச் சொல்லதிகாரக் கிளவியாக்கத்துட் சேனுவரையருரைத்த வாற்றானுணர்க.

இனி இந்நூலின் கண்ணுள்ள பன்னிரு சூத்திரங்களும் அவ்வவற்றிற் கூறப்பெற்ற விஷயங்களுக்கேற்ப அதிகரணங்களாக வகுக்கப்பெற்றிருக்கின்றன. ஈண்டதிகரணமென்பது தன்னாற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயப்பாடும் அதற்குப் பிறர் கூறும் பக்கமும் அதனை மறுத்துரைக்குஞ் சிந்தாந்தத்துணிபும், இயைபும், என்னும் இவ்வைந்தின் நிலைக்களமாம். இவற்றை வடநூலார் முறையே, விஷயம், சம்சமயம், பூர்வபக்ஷம், சித்தாந்த நிர்ணயம், சங்கதியெனக் கூறுவர். இவற்றுள் விஷயமென்பது அதிகரணத்திற் சொல்லப்பட்ட விஷயமெனவும், சம்சயமென்பது அவ்விஷயத்திற் றோன்றும் ஐயப்பாடெனவும், பூர்வபக்ஷமென்பது அவ்வையப்பாடுகளால் பிறமதத்தார் கூறும் ஆசங்கைகள் எனவும், சித்தாந்த நிர்ணய மென்பது பிறமதத்தார் கூறிய ஆசங்கைகளிலுள்ள குற்றங்களையெடுத்துக் காட்டி அவைகளைமறுத்துச் சித்தாந்தப் படுத்திய

துணிபுளனவும், சங்கதியென்பது சித்தாந்தப் படுத்திக்காட்டிய துணி புகளைப் பிரமாணங்களாலும் திட்டாந்தங்களாலும் வலியுறுத்தல் எனவுங்கண்டு கொள்க.

இனி ஒவ்வோரதிகரணமும் சூர்ணிகையென்னுங் கருத்துரை யானும், வார்த்திகமென்னும் பொழிப்புரையானும், பொருள் விளக் கப்பெறுவனவாம். இம்முதற் சூத்திரத்தில் "அவனவளது வெனு மவை மூவினைமையின்" என்பது, முதல் அதிகரணமாகவும், "தோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதாம்" என்பது இரண்டாமதி கரணமாகவும், "அந்தமாதி யென்மனார் புலவர்" என்பது மூன்றாமதி கரணமாகவும் உள்ளனவாம். இம்மூன்றும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் வருதல்லால் ஒரு சூத்திரத்தாற் கூறப்பெற்றன.

இனி மேற்காட்டிய முதலதிகரணத்திற்குப், "பிரபஞ்சம் உற்பத்தி, திதி நாசமென்னும் முத்தொழிலுடையது" என்பதைக் கருத்துரையாகவும், "தோற்றமும் ஈறும் காணப்பட்ட திதியின் பக்கத் தேகாணக் கிடத்தலின், ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட பிரபஞ்சம் உற்பத்தி, திதி நாசமுடைத்து" என்பதைப் பொழிப்புரை யாகவும், இரண்டாமதி கரணத்திற்கு "அம்முத் தொழிலும் அரனாலே யுடைத்து" என்பதைக் கருத்துரையாகவும், "இல்லதற்குத் தோற்ற மின்மையானும், உள்ளதற்குச் செய்வோறின்றிச் செய்வினையின்மை யானும், ஒடுங்கின சங்காரத்தின் வழியல்லது உற்பத்தியில்லை" என் பதைப் பொழிப்புரையாகவும், மூன்றும் அதிகரணத்திற்கு "மற்றிரு வரும் முத்தொழிற்படுவர்" என்பதைக்கருத்துரையாகவும் "சுட்டுணர் வின்றி நின்ற சங்காரத்தின் வழியல்லது சுதந்தரமின்றி நிற்றலான் சங்காரமே முதல்" என்பதைப் பொழிப்புரையாகவும் கண்டுகொள்க.

இனி முதலதிகரணத்துள்ள மேற்கூறிய ஐவகைப் பொருளி னையும் விளக்குவாம். உலகிற்குக் கருத்தாவின் உண்மையினைச் சாதிப் பான் வேண்டி அதற்கு முத்தொழிலுண்மையினைச் சாதிப்பான் புகுங்கால் கேட்போர்க்கு அம்முத் தொழிலும் உளவோ இலவோ என்னும் ஐயப்பாடுண்டாகும் வண்ணம், மீமாஞ்சையரும் லோகாய தரும், உலகம் தோற்றமும் ஈறுமின்றி என்றும் இவ்வாறே நிலைபெறு வதெனவும், அதனால் அது காரியப்பொருளாகாதெனவும், இவை கொண்டு இதற்கொரு கருத்தாவினுண்மை சாதித்தல் பொருந் தாதெனவுங் கூறுவர். அவருள் மீமாஞ்சை நூலார் கூறுவதாவது:-

உலகம் பிறப்பு இருப்பு இறப்பு என்னும் முத்தொழிலுடைய தென்பது காட்சியளவையாற் பெறப்படுவது மின்று; நீக்கமின்றி நிற்றலாகிய ஏதுக்காணுமையின் கருதலளவையாற் பெறப்படுவது மின்று. "செய்க" "செல்க" என்றாற்போலத் தொழிற்படுத்தும் வாக்கியங்களே சொற்பொருளுணரும் வேட்கையுடையோருக்கு

ஏவுவோர் சொற்கேட்டு இயற்றுவோர் செய்யுந்தொழிலானே அவ்வச்சொற்பொருளுணர நிற்றலிற் பிரமாணமாவனவேயன்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்களால் சொற்பொருளுணரப் படாமையின் அவை பிரமாணமாகாவாம். ஆயினும் தொழிற்படுத்தும் வாக்கியங்கட்கு யாதானுமொருவாற்றான் உபகாரமாதலுடைமையான் உபசரித்துப் பிரமாணமெனக்கொள்ளப்படுமாகலான், அதுபற்றி உரையளவையாற் பெறப்படுமென்பதும் இன்று; ஆகலின் உலகிற்கு முத்தொழிலுண்மை பெறப்படாது என்பதாம். இங்ஙனம் பூர்வ பக்க ஆசங்கை யுண்டாக இதனை மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு என்னை எனிற் கூறுதும் அநுபவமாய் உண்மையாய் ஒருவன் ஒருத்தி ஒன்றென்று சுட்டப்பட்ட உலகம் தோன்றி நின்று அழியும். அவன் அவள் அது என்னும் அவயவப் பகுப்புடைமையின், ஆடைபோலும், என்னும் அனுமானத்தானே, யாண்டு யாண்டு அவயவப் பகுப்புடைமை யுளதோ ஆண்டாண்டு தோன்றி நின்றழியுந் தன்மையுமுளது, என வருதலைக் கொண்டு நீக்கமின்றி நிற்றலாகியஏது உளதாகலின் மூவினையுடைமை துணியப்பட்டவாறு காண்க. நீக்கமின்றி நிற்றலை வடநூலார் அவினாபாவம் என்பர். ஈண்டு அவயவமென்றது; ஒரு பொருளின் ஏகதேசமாய் வேறு வேறு பிரிக்கப்படுந்தகுதி யுடையவற்றை யெனக்கொண்டு, நிலம், மலை, கடல், முதலியவற்றின் ஏகதேசமாகிய மண், சிலை, நீர், முதலியன தோண்டுதல், பிளத்தல், முகத்தல் முதலிய தொழில்களானே வேறு வேறு பிரித்தற்குயவாமாறு கண்டு கொள்க.

இனிச் சூத்திரத்துள் ஆண் பெண் அலி என்றுவது ஒருவன் ஒருத்தி ஒன்று என்றுவது கூறாது அவன் அவள் அது எனச் சுட்டுப் பெயர்களான் கூறினமையால், பிறபஞ்சம் சுட்டியுணரப்படும் பொருளாகிய அசத்தென்பதும் போதரும். இதனை "அசத்தாஞ் சுட்டியுணர் பொருளான வெல்லாம்" எனச்சித்தியாரும், "அறிவினாலறிந்த யாவுமசத்தாதலறிதி" எனச் சிவப்பிரகாசமும் ஓதியவாறு கண்டுகொள்க. அற்றேல், "அது நீயானுப்" எனச்சாந்தோக்கியத்தும், "அவனே தானே" என இந்நூல் பத்தாஞ்சூத்திரத்தும், "அவன் இவனாய் நின்ற முறை" எனச் சித்தியாரிலும், ஓதியவாற்றால் நித்தப் பொருளும் சுட்டியறியப்படுமல்லவா எனக்கூறின் :— அற்றன்று, அவை பொதுமையிற் சுட்டியறியப்படுமாயினும் அநுபவ நிலையிற் சுட்டியறியப்படாவாம். இதனை "உரையுணர்விறந்து நின்றுணர்வதோருணர்வே" எனவரும் மணிவாசகத்தானும், "அறிவிறந்தங் கறிந்திடர்" "பாவனையிறந்து நின்று பாவிக்கப்படுவதாகும்" எனவருஞ் சித்தியாரானும், "ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதி மாண்பும், கேட்பான் புகிலளவில்லை கிளக்கவேண்டா" "ஏதுக்களாலும் எடுத்தமொழியாலும் மிக்குச்-சோதிக்கவேண்டா" எனவரும் ஆளுடைய பிள்ளையார் அருள் வாக்காலும் தெளிந்துகொள்க.

இனித்தாய் தந்தை முதலியோர் இச் சொற்குப்பொருளிது எனத் தெரிவித்தலானும், நிகண்டு முதலியவற்றானும் சொற்பொருளுணர்ச்சி துணியப்படுமாகலின், தொழிற்படுத்துஞ் சொன்மாத்திரையானே துணியப்படுமென்னும் வரையறையின்று. அதுபற்றிப் பொருளியல்பு கூறும் வாக்கியங்கள் பிரமாணமல்ல வென்றல் பொருந்தாமையின் உரையளவை பிரமாணமேயாம்.

இங்ஙன் கருதளவையானே யுலகந்தோன்றி நின்றழியுமெனச் சாதித்து மீமாஞ்சையாரை மறுத்தது அமையுமாயினும், உலோகாயதர் காட்சியளவை யொன்றையே பிரமாணமெனக் கொண்டுக் கருதளவை முதலியன பிரமாணமல்ல வென்றும், அவற்றாற் சாதிப்பன பொருள்படாவென்றுங் கூறுவரன்றோ எனின் :— உலகம் உற்பத்தி, திதிநாசமுடைத்து, உற்பத்தியும் நாசமுங் காணப்பட்ட திதியின் பக்கத்தேகாணுமாறு உடனிகழ்தலின், எனவேறு மோர் ஏதுவையுங்கொள்ளின், காட்சியளவை பற்றியும் உலகம் உற்பத்தி, திதிநாசமுடைத்தென்பது பெறப்படும். அற்றேல் காணப்பட்ட திதியின் பக்கத்தே உற்பத்தியும் நாசமுங் காணுமாறு உடனிகழ்தல் எங்ஙன் எனில் பூதங்களை முதற்காரணமாகவுடைய வுலகிற்குத்திதி நிகழ்கின்ற காலத்து நாசமும் உற்பத்தியும் தனக்குத் துணைக்காரணமாகக் கொண்டே நிகழாநிற்கும். ஆகலின் உடனிகழ்தல் கூடுமென்றுணர்க. அத்தன்மைத்தாயின், ஒருபொருள்தோன்றவும், பிறிதொன்று நிற்கவும் மற்றொன்று அழிவதுங்காண்பதன்றி, எப்பொருளும் ஒருங்கே தோன்றி நின்று அழியக் கண்டிலமேஎனின் :- தம்முள் ஒருசார்திப் பலபொருள்களாகி விளங்குகின்ற வித்து முதலியன கார்கால மாகிய காலவிஷேடத்தில் ஒருங்கே முளைதோன்றி ஒருங்கே நின்று, வேனிற் காலமாகிய காலவிஷேடத்தில் அழிவது கண்கூடாகலின், அவ்வியல் பிற்றாயபொருள்களனைத்தும் ஒவ்வொரு காலவிஷேடத்தில் சாதிபற்றி யொருங்கே தோன்றி நின்றழியுமெனக் கண்டு கொள்க. (தொடரும்)

அறம்.

தவத்திரு. ஐயாறு அடிகள்
(சித்தபாலையதேசிகர் ஆதீனப்புலவர், அடிவாரம், பழநி.)

முன் (ம 1 இ 6 ப 74) தொடர்ச்சி.

உலகில் ஞானியர் சிலரே உளர் அல்லாதவர் பலர் உளர். இவற்றின் காரணம், தவம் செய்வோர் சிலர். செய்யாதவர் பலர் தவம் செய்யும் சிலரே ஞானியர், செய்யாத பலரே அஃதிலாதவர்.

(கூடா ஒழுக்கம்) அஃதாவது சிற்றின்பம் சேரா ஒழுக்கம். மனையறத்திலே நின்று காமம் நுகர்ந்து, அதில் வெறுப்புத் தோன்றி அவ்வின்பத்தை விட்டு, பேரின்பத்தினை விருப்பித் தவநெறி நிற்றல் தான் துறவறம் ஆகலானும், அருள் பூண்டு புலாலை மறுத்துத் தவம் புரிவதெல்லாம், ஐம்புலனை அடக்கி உள்ளம் உரம் பெற்று மெய்யுணர்ந்து வீடு பெறுதற்கே ஆதலாலும், உள்ளம் நெகிழ்ந்து புலன் வழி ஓடுவதாய சிற்றின்பத்தை நாடாமல் ஒழுக வேண்டும். இந்த ஒழுக்கம் தவத்தினைமேற்கொண்ட துறவியற்கு இல்லாமல் முடியாதது இதனை உலகம் நன்கனம் அறியும். ஆதலால் அவர் அந்த ஒழுக்கத்திற் பிழைக்கக் கருதுவரேல் உலம் அறியப்பிழையாமல் மறைந்து ஒழுகிப் பிழைத்து உலகை வஞ்சிப்பர்.

"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும்"

கூடா ஒழுக்கத்தினை மறைவிலே கைவிட்டொழுகுகின்ற மனத்தை யுடையவனது, மறைந்த ஓழக்கத்தை அந்த ஒழுக்கத்திற்குக் கருவியான அவனுடைய உடம்பிலே கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் கண்டு தம் உள்ளே சிரிக்கும்.

வெளி வேடத்தில் சிற்றின்பம் சேரா ஒழுக்கம் உடையனாகத் தன்னைக் காட்டிக் கொள்ள அவன் அந்த ஒழுக்கத்தை மேற்கொள்ள வன்மையின்றிக் கூட்டத்தை விரும்புகின்றது. ஆகலானே அத்தகைய மனம் வஞ்சமனம் ஆகின்றது. விரும்பியவழி வெளிப்படையாக ஒழுகுதல் தன்வேடத்திற் கொவ்வாது. ஆதலால் அவன் மறைந் தொழுக வேண்டியவனாகின்றான் எனவே அவன் ஒழுக்கம் படிற் றொழுக்கம். அந்த ஒழுக்கத்தை உலகம் அறியாதெனினும் புலன் வழியே சென்று அந்த ஒழுக்கத்திலே படிந்த அவனுடைய உள்ளம் அதனை நன்கனம் அறியும். ஆகையாலும் அந்த ஒழுக்கத்தை அவன் மறைப்பதையும் அவ்வுள்ளமே நன்றாக அறியும் ஆகையாலும் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகுவதாகும், தவவேடத்தினை மேற்

கொண்டாளுெரு துறவியின் உள்ளம், குற்றமென அறிந்த சிற்றின் பம் சேர்ந்த ஒழுக்கமாய குற்றத்திலே தாழுமேல், வானம் போன்று யர்ந்த அவனது வெளித் தவவேடம் அவனுக்கு ஒரு பயனையும் தாராது. தவவன்மை வேடத்தாலாவ தொன்றன்று

மனத்தினைத் தன்வழிப் படுத்தி அதனாலே பெறப்படுவதாய தவவன்மையில்லாத தன்மையுடையவன், தவத்தவர் பூணத்தக்க வேடத்தை மேற்கொண்டு, மனம்போன போக்கிலே போய் ஒழுகுதல் வன்மையற்ற பசுவன்மையுற்ற புலித்தோலை மேற் போர்த்து, தான் மேயத்தகாத அயலவர் பயிரைத் தான் மனப்படியே சென்று மேய்வதனோ டொப்பானது.

"வலியின் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று"

பசுவானது புலியின் தோலைப் போர்த்து அயலவர் பயிரை மேய்வ தால் ஆம் பயன் யாதோ என்னின், உண்மை யறிந்தவரால் கடியப் பட்டுப் பட்டியில் அடைபடுதல். அன்றியும் புலியின் வன்மையைப் பெறுதலுமின்றாம். அதுபோல, தவவேடம் கொண்டு கூடா ஒழுக்கம் பிழைத்தலான் ஆம்பயன் யாதோ என்றால், உண்மையறிந்தவரால் கடியப்பட்டு நிரயத்தே ஆழ்தல் அன்றி தவத்தவரின் வன்மை பெறுதலு மின்றாம்.

அல்லாமலும் புலிவேடம் கொள்ளாவிட்டால் பசுவானது உணவு பெற்று இன்புற்றிருத்தல் கூடும். அதுபோன்று இல்லறத்திலே நின்று தம் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளல் கூடும். எனவே தவவேடத்தை மேற்கொண்டு சிற்றின்பம் சேராத ஒழுக்கத்தினைக் கொள்ளாமல் விடுபவர், இல்லறமும் இல்லாமல், துறவறமுமில்லாமல் இடையூசலாடிக் கெடுவர். புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது அது போல உண்மைத் தவத்தோர், ஒருகால் வேட்கை எழுந்தாலும் அங்ஙனம் ஒழுகார். போலி வேடத்தை மேற்கொண்ட பசு, வேடத் தின் வலியால் பிறர் நிலத்தே துணிந்து சென்று மேய்தலைச் செய்யும். அதுபோலப் போலி வேடத் தவசி துணிந்து அல்லவை செய்வான். சிற்றின்பம் சேராத ஒழுக்கமாவது பேரின்பம் சேரும் ஒழுக்கம்.

அடுத்தபடி கள்ளாமையினைக் கைக்கொளல் வேண்டும். கள்ளாமையாவது பிறர் உடைமையை அவரை வஞ்சகம் செய்து கொள்ளாமை. மனையறத்தார்க்காயின் நிரை கோடல் முதலியன மற நிலையறமாய்க் கடியப்படாதன. ஈண்டு கள்ளாமை சிறப்பாக துறவறத் திற்கே உரியதாயது.

காமமும் பொருளுங் கடிந்து வீடுபே றொன்றையே கருதிய அறம் ஆதலின் துறவறத்திற்குப் பொருள்பற்றி நிகழ்வதாய களவும் கடியப்பட்டது. காமம் பற்றிய ஒழுக்கம் கடிவது கூடா ஒழுக்கம். பொருள் பற்றிய கூடா ஒழுக்கம் கடிவது கள்ளாமை.

பிறர் தன்னை இகழாதிருக்க வேண்டுவான், யாதொரு பொருளையும், பொருளுடையாரை வஞ்சனை செய்து கொள்ள நினைத்தற்கும் இடம் கொடாமல் தனது உள்ளத்தைக் காக்க வேண்டும். துறவியர், பொருளையும் இன்பத்தையும் அறவே துறந்தவராவர். அவர் பொருளை விரும்புகலே குற்றம். களவிலே கொள்ளல் அதனினும் குற்றமாம். களவு இகழ்ச்சிக்குரியது, இகழ்ச்சிக் கிடங்கொடாதாற்றினுல் துறவறம் சிறந்ததாகும். அறமல்லாத செயல்களைச் செய்தல் மட்டுமின்றிச் செய்ய விரும்பி உள்ளத்தால் நினைத்தலும் தீயதேயாம். ஆகையால், பிறன் பொருளை அவன் அறியாமல் வஞ்சித்துக் கொள்வோம் என்று கருதல் வேண்டாம். தவத்தாலாம் ஞானமாகிய ஆக்கத்தைத் தேட முற்பட்டவர்க்கு, களவினுல் ஆய பொருளாக்கம் கேடுவிளைவிக்கும். களவினைக் கருதாதவர்க்கு சேய்மையதாய புத்தேளுலகு தவருது.

வாய்மை. அஃதாவது மெய்மை. பெரும்பான்மையும் கூட்ட விருப்பும், பொருள் விருப்பும் பற்றி நிகழ்வதாய பொய்மையை இது விலக்குவது. இன்பம், பொருள் இவற்றின் சார்பாக நிகழும் இல்லறத்திற்கு இது முற்ற முடிவதரிது. துறவறத்திற்கே சிறப்பாக உரியது வாய்மை. வாய்மை வாயது தன்மை. வாய்மை என்று சிறப்பித்துப் பேசப்படுவது யாதெனின், பிற உயிர்கட்கு ஒரு சிறிதும் தீமை தராத சொற்களைச் சொல்லுதல், தீமையுள்ளன நிகழ்ந்தனவேனும் சொல்லப்படுவன அல்ல. குற்றமற்ற நன்மையைப் பிறர்க்குத் தருமேல் பொய்மை மொழிகளும் மெய்மை மொழிகளைச் சேர்ந்தனவே. தன்னுள்ளத்திற்குப்பொருந்தப் பொய்கூரு தொழுகுவனேல் அவன் உயர்ந்தோர் உள்ளத் தெல்லாம் உள்ளவனுவான். (உயர்ந்தோரால் நன்கு மதிக்கப்படுவன்) ஒருவன் தன்மனத்தொடு பொருந்த வாய்மை மொழிவானுயின் அவன் தானம் தவம் இரண்டனையும் ஒருங்கே செய்வாரைவிடச் சிறந்தவனுவன். தானமும் தவமும் புறத்தாலாய மெய்யாலாம். அகமாயமனத்தொடு பொருந்திய வாய்மையே சிறப்புடையது. புகழுக்குக் காரணம் பொய்யாமையே. "பொய்யா விளக்கம் புகழ்செய்யும்" நான் மணிக்கடிகை.

அப் பொய்யாமையே எல்லா அறங்களையும் எய்துவிக்கும். நீரினுலே ஒருவனுக்கு உடம்பு தூயதாம். அதுபோல உள்ளம் தூயதாந் தன்மை வாய்மையானுகும். உடம்பு தூயதாக நீரன்றி வேறு காரணம் இல்லாதவாறு போல, தூயதாக வாய்மையன்றி வேறு காரணம் இன்று. புறந்தூய்மை அகந்தூய்மை இரண்டும் துறவியர்க்கு இன்றியமையாதன. புறவிருள் போக்கும் விளக்கெல்லாம் விளக்கல்ல, அகவிருள் கடியும் வாய்மையாம் விளக்கே சான்ருேர்க்குச் சிறந்த விளக்காம்.

வெகுளாமை. சினங்கொள்ளாதிருத்தல். தாம் துன்புற்ற விடத்துச் சினம் கொள்ளல் இயற்கை. துன்பத்தைப் பொருத்தல் தவப்பகுதி. ஆகையால், தவநெறி நின்றவர் அயலவர் தமக்குண்டாகிய துன்பத்தைப் பொறுக்காமல் அவர்மேற் சினங் கொள்ளல் துறவியற்குப் பொருந்ாது "யாதொன்றும் தீமையிலாத சொலல்" வாய்மையே யன்றி வெகுளாமையுமாம். யாவரிடத்தும் வெகுளி செய்யாதிருத்தல் வேண்டும். பண்பட்ட உள்ளத்தைக் கவர்ந்து எழுந்து ஓங்கும் சினத்தை வரவொண்ணாது காப்பாற்றிக் கொள்ளும் குணத்தையே சிறந்த குணம் என்று இயம்ப வேண்டும். ஒரு துறவியானவன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள விரும்புவானானால் சினம் என்ற உட்பகை தோன்றாமல் காப்பாற்ற வேண்டும். பல சுடர்களையுடைய நெருப்பு தன் மேற் படிந்தாற்போன்ற துன்பங்களைத் தனக்குச் செய்தானாயினும் அவனைச் சினவாதிருத்தலே நலம். ஒரு துறவியானவன் தன் உள்ளத்தே சினங்கொள்ளலை ஒருபோதும் நினையானாயின் அவன் கருதிய பெரும் பேறுகளை யெல்லாம் ஒருங்கு பெறுவன். சினத்தை விட்டவர் வீடு பெற்றவரோடு ஒப்பாவர்.

இன்னா செய்யாமை—ஒருயிர்க்கும் துன்பம் செய்யாதிருத்தல் தனக்கு ஒருவன் தீங்கு செய்தபோது அவலை வெகுளாவிடினும், அத்தீமையை தம் உள்ளத்தே வைத்து அவனுக்குத் தீங்கு செய்தலுங் கூடும் அதுவுமாகாது. பிறவுயிர்க்குத் தீமை செய்தல் செற்றம்பற்றி யேனும், மறவியாலேனும் ஆம் அதுவுமாகாது.

எத்தகைய சிறப்புக்களைத் தருவதாயினும் பிறர்க்கு இன்னா செய்யாமை பெரியோர்கள் கொள்கை. தம்மீது சீற்றம் கொண்டு ஒருவன் தமக்கு தீமை செய்தவிடத்தும், அவனுக்குத் துன்பம் செய்யாமையும் ஆன்றோர் கொள்கை. ஒரு துறவியானவன் தமக்கின்னாதன செய்தவரை ஒறுத்தல் அவர் நாணும்படி இனிய உவகைகளைச் செய்து அவர் தமக்குச் செய்த தீங்கையும் அது காரணமாக அவரை ஒறுக்க வேண்டும் என்னும் கருத்தையும் மறந்து விடுதலாகும். (தொடரும்)

குறிப்பு.

"துறவி" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15-க்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

அவிரோத வுந்தியார்.

தவத்திரு. சுவாமி முக்தானந்தா அவர்கள்,
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 6 ப 78) தொடர்ச்சி.

அ— உந்தியார்:—

பொன்றுப் பொருளே பொருளென்பர் நல்லோர்
அஃதன்றிப் பொருளியா துந்தீ பற
அல்லன மாயையென் றுந்தீ பற

பொருள்:—மக்கட் பிறவியினர், முன்னைத் தவத்தின் நற்பயனால் கடவுளிடத்து உண்மை அன்பும், நல்லொழுக்கமும், உயிர்கள் மாட்டு இரக்கமும், உடைய் ஒழுக்கமுள்ள நற்குலத்திற் பிறந்து, தாய் தந்தையர்களால் நல்லறிவு கொளுத்தப்பட்டு நல்லன வற்றில் ஒழுங்காக நடத்தப்பட்டவர்களாய மக்கள், முன்னரே மனதிற் படிந்து, அமைந்து கிடக்கும் நன்மையும், தாய் தந்தையராற் பழகிய நல்லொழுக்கமும் உடையவராய் இருத்தல் வேண்டும். இதனால் மேன்மையில் விருப்பமும், அறிவுடையார் பால் அன்பும், பெரியோர்களிடத்துப் பணிவும் உண்டாகும். இந்த நிலையே 'அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை' எனப்புகழப் படுகின்றது. இத்தகைய கேண்மையே, புல் முதலாகக் கழிந்த எல்லாப் பிறப்பு கட்கும் மேலாய வீடு பெறுதற்கு உரித்தாய இந்த மனிதப் பிறப்பைத் தந்தது. இப் பிறவியில் செய்யப் படும் நன்மை தீமைகளாகிய வினைகளின் படிவுகளும் பாசியோல் ஒன் றன் பின் ஒன்றாய் முறையே வாசனை படியுங் கருவூலத்தில் இருந்து எதிர்த்து வந்து தாக்கும் மற்றைய பிறவிகளுக்கு கால் கோளாய், படி வனவாகும். முன்னர்க் கூறியபெரியோர் கேண்மை உண்மைவுணர்வு என்னும் அருமருந்தால் அப்படிவுகளைப் போக்கும். அப்படிவுகள் குறையக் குறைய பழக்கமாய்ப் புலன்கள் மேல் தொடர்ந்து பற்றும் பொறிகள், போக்கொழிந்து மடங்கும். மடங்கிய பொறிகள் அவற்றைச் செலுத்துவதாகிய மனத்துள் அடங்கும். பொறிகளை அடக்கிய அம்மனம், பெரியோரால் உணர்த்தப்பட்ட குறிப்பை நாடும். பின்னர் குறிப்பறிய உள்நோக்கிச் செல்லும். செல்லும் பொழுது குறியீட்டை அடையும் வரையும், உறுதிப் படாமையால் சோர்வும், கவலையும், அடைந்து துன்பத்தையும் உறும். துன்புறினும் இடையீடின்றி, அடிக்கடி அம்மனதை செலுத்துதல் வேண்டும். செலுத்தப் பட்ட அம்மனம், சென்று சென்று திரும்பிய போதிலும், மீண்டும், உள்நு ழையும் நோக்குடையதாகவே இருக்கும், இங்ஙனம் போய்ப் போய் மீள்வதால், அம்மனந் தேய்ந்து தேய்ந்து அதற்குள்ள தடிப்பாந் தன்மை குறையும், பின்னர் நுண்ணிய இயல் பினதாய், பண்பாடு

பெறுதற்குத் தகுதியதாய் ஆய்விடும். அப்பொழுது இம்மனமெனும் சிறு குழவி, சிறிது அறிவுதிக்கப் பெற்று குரு வருளிய தன்னொளியாய் விளங்குவதான எல்லையற்ற பொருளை அணுகும். அணுகவே, தனது இயல்பாந் தன்மையை இழக்கும். அந்த நிலையில் 'செல்லுறு மழைக்காலம் போய்த் தெளிந்த ஆகாயம் போன்று' சுட்டற இலங்கும் 'ஆன்மா' எனும் பொருள் அம்மனதை கண்ணொளியைக் கதிரொளி போன்று தன் வயமாய் இழுத்து விழுங்கும். அந்நிலையில் வேற்றுப் பொருள்கள் ஒன்றுபட்ட தன்மைபோல் அல்லாமல், தானென்பதும் பிறவென்பதும் தோன்றாமல், இத்தன்மை ஆயினேன் என்ற எண்ணத்தின் நுண்மையும் இன்றி, ஒன்றெனக் குறிக்கவும் இயலாத ஒன்றாய், நிலைத்து விளங்கும்

இப்படி முற்றிலும் முடிந்த உயர்நிலையும், விடாப்பிடியாக நிட்டை பயின்றுவரும் நோன்புடையார்க்கும், இன்னதெனக் குறிக்கவோ? எடுத்தியம்பவோ? இயலாதபடி, தானே தானாய் உள்ள இன்பத்தை தானே எண்ணி எண்ணித் திளைத்தற்கு உரியதாகும். அதில் கற்பிக்கப்பட்ட குணங்குறிகள், உள்ளன போன்றும், இல்லன போன்றும் எண்ணுதற்கான ஒரு நிலை, சிலர்க்கு உண்டாகலாம் அது ஒரு பாவனை நிலை, எனக் கூறப்படும். அந்த நிலையிலாவது உறுதியுடன் நின்றால், மனதின்பதைப்பு அறும். அதினின்றும் மேற்செல்லுதல் வேண்டும். அந்த மேல் நிலை பாவனாதீதம் எனவும், நிர்விகல்பம், எனவும், நிட்டை எனவும், சமாதி எனவும், புகழப்படும் தனி நிலை ஆகும். இந்நிலையை எய்திய அதே வினாடியில், பிறப் பொழிந்தது. நுகரவேண்டியவை முற்றுந் தொலைந்தன. இந்த நிலையை குருவருள் இன்றி எவரும் தரவல்லார் அல்லர். குருவருளால் இந்நிலைமையைப் பெற்று விளங்குபவர்களே இங்கு உந்தியிற் கூறப்பட்ட நல்லோர்கள் ஆவர்.

"பொன்றுப் பொருளே பொருள் என்பர்" :—

எக்காலத்தும், யாண்டும் எவ்வகையாலும், அழிந்ததாகவோ, அழிவதாகவோ, கண்டேனுங், கேட்டேனும் இல்லாத பொருளே அழிவற்ற பொருள் எத்தகைய கொள்கை உடையோரும், தங்கள் தங்கள் முடிவான அடைவிடமாய்க் கொள்ளுகின்ற, ஒரே பொருள் என்பது இதுவே. "வீடு" என்று வேதங்களும் உப நிடதங்களும் இவற்றைப் பின்பற்றிய எல்லாமாய அனுபவ நூல்களும் கூறும் பொருளும் இதுவே. நல்லாசிரியர், தன் கருத்திற்கொத்த நன்மாணாக் கனுக்கு, அருள் மனங் கொண்டு தனியிடத்திலிருத்தி உபதேசிப்பதும் இப்பொருளே யாகும்.

"அஃதன்றி பொருளியாது" :—

வீடெனப் புகழப்படும் அம் முடிபொருள் ஒன்றே யல்லாமல், வேறு, பொருளெனும் பெயரால் உரைத்தற்கோ உணர்தற்கோ உரியது யாது உளது? ஒன்று மில்லை.

"அல்லன மாயை யென்று உந்தீபற":—

மாயை யெனுமிவ் வுரைக் கருத்தம் மதிக்கின் யாதொன்றிலாததுவே, என்றும் 'சத்தையின்றி யொரு பொருளுந் தானே யுண்டாயிருக்குமோ" என்றும், கேட்கப் படுவனவற்றால், மாயை என்பதும், அதன் செய்கை என்பதும், மன நினைவில் உண்டுபோற்றோன்றி, நினை வொழிவில் இல்லையாகவே உறுதிப்படும், இவ்வுலகையே யாகும். "அல்லன" வென்று பன்மையிற் கூறியது தோற்றத்தில் தோற்றமான ஐம்பூதம், ஐம்புலன், ஐம்பொறி இவைகளைக் குறிக்க வெனக் கொண்டு, பல படித்தாகத் தோற்றமளிக்கும் எவையும் மாயையின் செயலாய், நிலையாதனவாய் இல்லாதனவாய்க், காணப் படுவன என வறிவாம்.

பொன்றுப் பொருளே பொருளென்பதின் மேற்கோள்கள்:—

திருக்கடைக் காப்பு:—

செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.

திருவாசகம்:—

மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே
தேடும் பொருளுஞ் சிவன் கழலே. என்பன

அல்லன மாயை யென்பதன் மேற்கோள்கள். அஞ்ஞவதைப் பரணி:-

என்றும் பொருவரிய வின்பப் பொரு ளுடையார்
பொன்றும் பொருளும் பொருளாகப் போற்றுவரோ. என்றும்

மோகவதைப் பரணி:—

வழங்குவது மழிபொருளோ மறைதேடும் வான்பொருளே.

என்றும் கூறுவன காண்பாம். (தொடரும்)

96-ம் பக்கத் தொடர்ச்சி:

எற்படும். அதிலிருந்து குண்டலி சக்தியானவள் உருத்திர முடிச்சை அறுத்து சிவவடிவத்தை எய்துகின்றாள். அப்பொழுதே சூரிய சந்திரர்களின் ஐக்கியம் உண்டாகின்றது. பின்னர் சிவசக்திகளின் சேர்க்கை உளதாகின்றது. அப்பொழுது குண்டலி சக்தி, மூன்று முடிச்சுக்களை அறுத்தலால் முக்குணங்களைக் கடந்து நிற்கின்றாள் சிவசக்திகளின் ஐக்கியமுண்டான பொழுதே மேலான நிருவிகற்ப நிலை உண்டாகின்றது. (116)

(தொடரும்)

யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

தவத்திரு. திரிமூர்த்தி சுவாமிகள்,
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழநி)

முன் (ம 1 இ 6 ப 80) தொடர்ச்சி.

(அ...கை) சீதளீ கும்பகத்தின் இலக்கணங் கூறல்.

வாயாற் காற்றை நன்கு இழுத்து இரு மூக்குகளால் வெளியில் விடவேண்டும். இந்தச் சீதளீ கும்பகப் பயிற்சியும் பித்தம், பசி, தாகம் இவற்றைக் கெடுக்கின்றது.

(அ...கை) பஸ்திரிகா கும்பகத்தின் இலக்கணங்கூறல்.

இரும்பு வேலை செய்யும் கம்மியனுடைய துருத்தி, காற்றை வேகமாய்க் கொண்டு வெளியில் விடுவதுபோன்று, புத்திமானாகிய புருடன் வயிற்றிலுள்ள காற்றை களைப்புண்டாகும்படி இரு மூக்குகளாலும் வெளியில் விட்டு, உள்ளிழுக்கவேண்டும். பின்னர் உடம்பு களைப்புண்டாகும் வண்ணம் சூரிய நாடியாற் காற்றை நிரப்பவேண்டும். பிறகு கழுத்தை வளைத்துக்கொண்டு சந்திர நாடியால் வெளியில் விடுதல்வேண்டும். இவ்விதப் பயிற்சி பஸ்திரிகாகும்பகம் ஆகின்றது. இது மிகுதியாய்ச் செய்யத்தக்கது. இந்த பஸ்திரிகா கும்பகமானது, வாத பித்த சிலேத்துமங்களைப் போக்குவதும், வாயிலுள்ள குற்றத்தைக் கெடுப்பதும், உடலிலுள்ள நெருப்பை வளர்ப்பதும், குண்டலி சக்தியை விழிப்புறச் செய்வதும், இன்பமாவதும், நலத்தைத் தருவதும், சுழுமுனை நாடியின் முகத்திலுள்ள கப முதலிய தடையைக் கெடுப்பதும், நன்கு பயில்வதால் மூன்று முடிச்சுக்களை அறுப்பதும் ஆகின்றது. (100)

(அ...கை) மூவகைப் பயிற்சியைக் கூறல்.

இப்பொழுது முறையாக மூவகைப் பயிற்சியைக் கூறுகின்றேன் கேட்பாயாக. எப்பொழுதும் இந்த மூன்றையும் பயில்கின்றவன் காற்றின் வெற்றியைப் பெறுகின்றான். மேற்சொன்ன நான்கின் பயிற்சியால் கும்பகம் சித்திக்கின்றது. அத்துடன் என்னாற் சொல்லப்போகின்ற இந்த மூன்றையுஞ் செய்யவேண்டும். அவற்றில், முதலது மூலபந்தம், இரண்டாவது உட்டியாணபந்தம், மூன்றாவது ஜாலந்தர பந்தம் ஆகிறது. இதன் இலக்கணத்தை நான் சொல்லுகின்றேன். (103)

(அ...கை) மூலபந்தத்தின் இலக்கணங் கூறல்.

இருவிலாப் பக்கங்களை நன்ருய் அழுந்தப்பிடித்து குண்டியை வலிந்து மேல்எழச் செய்வாஞக. எவ்வாறு, காற்று மேற் செல்லுமோ, அவ்வாறு அடிக்கடி பயில்வாஞக. இவ்விதப் பயிற்சியால் பிராண பானன்களும் நாதபிந்துக்களும் ஐக்கியத்தை அடைந்து, யோக சித்தியைத் தருகின்றன. இதில் ஐயமில்லை. (105)

(அ...கை) உட்டியாண பந்தத்தின் இலக்கணங் கூறல்.

கும்பகத்தின் முடிவிலும், இரேசகத்தின் முதலிலும், உட்டியாணமென்ற பயிற்சி செய்யத்தக்கது. இந்தப் பயிற்சியால், சுழுமுனை வழியிற் பிராணன் மேல்நோக்கிச் செல்லுகின்றது. ஆகையால் இந்தப் பயிற்சி யோகிகளால் உட்டியாணமென்றே சொல்லப்பட்டது மற்றும் ஆசிரியரால் இந்த உட்டியாண பந்தமானது என்றும் உடன் பிறந்ததாகச் சொல்லப்பட்டது. சோம்பலின்றி இதைப் பயில்கின்றவன் கிழவனுயினும் வாலிபனுகின்ருன். முயற்சியுடன் அடிவயிற்றை நாடிக்குமேல் ஏறச்செய்வாஞக. இங்ஙனம் ஆறுமாதம் பழகுவாஞயின் அவன் நமனை வெல்லுகின்ருன் இதில் ஐயமில்லை. (108)

(அ... கை) ஜாலந்தரப் பழக்கத்தின் இலக்கணங் கூறல்.

காற்றை வயிற்றில் நிரப்பிய பின், கழுத்தை மார்பில் அழுந்த வைப்பது ஜாலந்தர பயிற்சியாகும். இந்தப் பயிற்சி காற்றின் வழியைத் தடுக்கின்றது. இது அமிர்தத்தைப் பெருகச் செய்கின்றது. கழுத்தைச் சுருங்கச் செய்வதான ஜாலந்தரப் பயிற்சியாலும், குண்டியை மேலுந்துவதான மூலபந்தத்தாலும், அடிவயிற்றை மேலேறச் செய்வதான உட்டியாண பந்தத்தாலும், பிராணன் விரைந்து சுழுமுனை நாடியுட் செல்லுகின்றது. (112)

(அ....கை) குண்டலி சக்தியால், மூன்றுமுடிச்சை அறுத்தவன் நிருவிகற்ப நிலை எய்துகின்ருன் எனக் கூறல்.

யோகி வஜ்ராசனத்தில் அமர்ந்து, குண்டலி சக்தியை அசைப்பாஞக. பிறகு துருத்திவடிவ பஸ்திரிகா பயிற்சியைச் செய்யவேண்டும் அந்த பயிற்சியால் குண்டலி சக்தி விரைந்து விழித்து எழுகின்ருள். அப்பொழுது காய்ச்சிய இரும்புக் கம்பியால் மூங்கிலிலுள்ள கணுக்கள் எங்ஙனம் துளைக்கப் படுகின்றனவோ, அங்ஙனமே முதுகெலும்பிலுள்ள முடிச்சானது காற்ருல் அறுபடுகின்றது. அப்பொழுது முதுகெலும்பில் எறும்பு மொய்த்தது போன்று தினவு உண்டாகின்றது. இடையருது பயில்வதால் சுழுமுனை நாடியிலும் அங்ஙனம் தினவு

[94-ம் பக்கம் பார்க்க

ஓம்
தத் ஸத்

வேண்டுகோள்.

தொண்டன். T. N. பரிமணம் பிள்ளையவர்கள், சீகாழி.

"அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற்
றிறந்தான் பெருமையை என்சொல்லு வேன்கச்சி ஏகம்பனே"
என்றார் தென்னாட்டுத் தலைசிறந்த துறவி பட்டினத்தடிகளார்.

என்பதற்கிணங்க தமிழ் நாட்டில் நிலவ அவாவுற்று வெளிவரும் அருந் "துறவி" யை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருமேனி பெற்றுலவச் செய்து குழந்தை போன்று வளர்ப்பது அறிவான் மேம்பட்ட இல்லறத்தார்க்கு முரிய தாகும். மிக்க அருமை வாய்ந்த இம்மனிதப் பிறப்பின் சிறப்பு, தன்னையுமுணர்ந்து தலைவனையுந் தன் உள்ளத்தே கோவிலாகக்கொண்டு அனுபவவாயிலாகக் கண்டு, இரண்டறக் கலந்து, பிறவா வண்ணம் பெரும்பே றடைவதையே, செயற்கரிய செய்வர் பெரியோர் என்று பெருமைபடக் கூறி யுள்ளதாகும்.

'காடே திரிந்தென்ன காற்றைப் புசித்தென்ன கந்தை சுற்றி, யோடே யெடுத்தென்ன உள்ளன்பி லாதவர் ஓங்குவிண்ணோர், நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால், வீடே யிருப்பினு மெஞ்ஞான வீட்டின்ப மேவுவரே" என்பதற் கிணங்கவும், மெஞ்ஞானிகள் திருவள் ளுவர் போன்று என்னிலையினு முள்ளவராதலின், "இல்வாழ்வா னென்பானியல் புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை" என்பதையும் உணர்ந்து இல்லற ஞானிகளும் துணைவராவ தென்பதை மனதிற்கொண்டு சந்தாதாரராக ஆர்வங் கொள்ளுவது உரிமையாகும். இக்காலம், பல சஞ்சிகைகள், கற்பனை குய்யுக்திகள் நிரம்பப் பெற்றனவாகவும், நல்லொழுக்கம். நன்னெறி புகட்டுவதற்கும் சிறப்புற் றனவாகம் வெளிவருதைச் சிந்திக்க, மக்கள் அறிவு தாழ்ந்த நிலைக்குச் செல்ல அறைகூவி அழைக்கின்றனவாகவும் இருந்து வருகிறது. அவைகள் சார்பில் மனம் அவமே செல்வதைத்தடுத்து நல்வழியில் திருத்தி சாந்திபெறச் செய்யமுற்படுவது அவசியமாகும். "வந்த வரவை மறந்து மிக்க மாதர் பொன் பூமிமயக்கத்திலாழும் இந்த மயக்கை யறுக்க எனக் கெந்தை மெஞ்ஞான வெழில்வாள் கொடுத்தான்" என்று தன் மகிழ்வைப் பறைசாற்றியுள்ளார் தாயுமானவர். மேற்செய்யுள் திடம் பெறும் வண்ணம் 'ஒன்றென் றிரு தெய்வமுண்டென் றிரு வுயர் செல்வமெல்லாம்' அன்றென் றிரு" என்பதற்கொவ்வ இறைவனொன்றுளன் என்பதை விசாரபூர்வ மாகத் திடஞானங்கொண்டு தனக்குத்தானகவே உண்மை உணர்வுபெற்று, கலந்து மேவிடும் பேரின்ப சாகரத்தி லாழ்த்திய விநோதங்களைச் சுகானுபவ தவசிரேஷ்ட ராயுள்ள பலமுனிவர்கள் வைத்துப்போன ஞான பொக்கிஷங்களின் கருத்துகள் பலவற்றையும், உப நிஷத்து முதலாகவுள்ள ஞான நூற்களின் சாரங்களையுந் திரட்டி வந்து வருஷிக்குங் கொண்டலாகச் செயலாற்ற முன்வந்துள்ள இச் சஞ்சிகையை வளர்ச்சி யடையுமாறு அறிவாளிகள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து ஊக்குவித்துத் தழைக்கச்செய்வதும் கடமையாகுமென தெரிவித்துக்கொள்கிறேன்

சாந்தி சாந்தி சாந்தி

Regd. No. M. 6630.

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணாமலை.
ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கீழ்ப்பாலூர்.